


22.12. 2024

தலைப்புச் செய்திகள்

- இந்தியா - குவைத் நாடுகளுக்கிடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று மேற்கொள்கிறார்.
- உடல் ஆரோக்கியத்திற்கு மிதிவண்டி பயன்பாட்டின் அவசியத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.
- இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் உள்ளிட்ட 12 தீர்மானங்கள் திமுக செயற்குழு கூட்டத்தில் இன்று நிறைவேற்றப்பட்டன.
- தமிழ்நாட்டில் ஆதி திராவிட பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- வதோதராவில் வெஸ்ட் இண்டிஸ்க்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர் குவைத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி குவைத்தில் அந்நாட்டு பிரதமர், குவைத் அமிர், பட்டத்து இளவரசர் உள்ளிட்டோரை சந்தித்து இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இரண்டு நாள் அரசுமுறை பயணமாக நேற்று குவைத் சென்றடைந்த பிரதமர், இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றினார்.

இந்தியா திறன்மேம்பாட்டு திட்டங்களை உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப மேம்படுத்தி வருவதாக தெரிவித்த பிரதமர் சுகாதாரத்துறை, மருந்து பொருட்கள், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் பெருமளவு உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆற்றல் வர்த்தகம் முதலீடுகள் உள்ளிட்ட துறைகளில் விரிவடைந்துள்ள பரஸ்பர நட்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்றும் இருநாட்டு உறவுகளை மேம்படுத்துவதில் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பு அளப்பறியது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

**********

பிரதமர் ரோஜ்கர்

பிரதமரின் ரோஜ்கர் யோஜனா வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் புதிதாக பணியமர்த்தப்பட உள்ள 71 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கான பணிநியமன ஆணைகளை பிரதமர் திரு.நரேந்திரமோடி நாளை காணொலி வாயிலாக வழங்குகிறார்.

நாடுமுழுவதும் 45 இடங்களில் நடைபெறும் இம்முகாம்களின் மூலம் தபால்துறை, உயர்கல்வி, சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் நிதி சேவை உள்ளிட்ட துறைகளுக்கான நியமன ஆணைகள் வழங்கப்படுகின்றன.

**********

அமித்ஷா

இளைஞர்கள் திறன்மேம்பாட்டு பயிற்சி பெற்று சுய தொழில் தொடங்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

திரிபுரா மாநிலம் தலாயில் 668 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு முடிவுற்ற திட்டங்களை தொடங்கிவைத்து புதிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர் கல்வியின் மூலம் இளைஞர்கள் வாழ்வின் மிக உயரிய இடத்தை எட்ட முடியும் என்றார்.

3 நாள் பயணமாக அங்கு சென்றுள்ள அவர் அப்பகுதி மக்களுக்கு ஆயுஷ்மான் பாரத் சுகாதார அட்டைகள் விரைவில் வழங்கப்படும் என்றார்.

**********

மன்சூக் மாண்டவியா

மிதிவண்டிகளை பயன்படுத்துவது உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமன்றி, சூழல் மாசுபாடுகளுக்கும் தீர்வாக அமையும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் CRPF மற்றும் இந்தோ திபெத் எல்லை பாதுகாப்பு படை வீரர்களுடன் இன்றுகாலை மிதிவண்டி பயணம் மேற்கொண்ட அவர் நாடுமுழுவதும் ஆயிரத்து 100 இடங்களில் இத்தகைய மிதிவண்டி பேரணிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

இந்திய விளையாட்டு ஆணைய பயிற்சி மையம் சார்பில் திருவள்ளூரில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணி குறித்து எமது செய்தியாளர்:

வாய்ஸ்

**********

கணித தினம்

தேசிய கணித தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

கணிதமேதை சீனிவாச ராமானுஜத்தின் பிறந்த தினமான டிசம்பர் 22-ம் தேதி ஆண்டுதோறும் தேசிய கணித தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

ராமானுஜத்தின் கணித கண்டுபிடிப்புகள் இன்றளவும் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

**********

செயற்குழு கூட்டம்

திமுக செயற்குழு கூட்டம் அக்கட்சி தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

இதில் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கைவிடப்பட வேண்டும்,

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களும் சிறை பிடிக்கப்பட்ட படகுகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்,

தமிழகத்திற்கு உரிய பேரிடர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்

மதுரையில் டங்ஸ்டன் கனிம சுரங்க பணிகளுக்கு கண்டனம் உள்ளிட்ட 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**********

தமிழக அரசு அறிக்கை

தமிழ்நாட்டில் ஆதி திராவிட பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

சென்னையில் இன்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் நரிக்குறவர் மற்றும் பழங்குடியினர் சுய தொழில் தொடங்க 11 கோடியே ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் சிறு வணிக கடன்கள் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆதி திராவிடர் தொழில்முனைவோருக்கான மானியம் குடியிருப்பு மேம்பாட்டு திட்டங்கள், இலவச வீட்டுமனைகள், மாணாக்கருக்கான விடுதி கட்டிடங்கள் உள்ளிட்ட பல்வேறு நல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

**********

கலைஞர் நூல்கள்

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் 179 நூல்கள் நாட்டுடமையாக்கப்பட்டதற்கான அரசாணையை மாநில தமிழ் வளர்ச்சி மற்றும் செய்திதுறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் சென்னையில் இன்று அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கலைஞர் கருணாநிதியின் நெஞ்சுக்கு நீதி, குரலோவியம், சங்கத்தமிழ் உள்ளிட்ட அனைத்து படைப்புகளும் நூல் உரிமை தொகையின்றி நாட்டுடமையாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**********

நாட்டியவிழா

பிரசித்திபெற்ற மாமல்லபுரம் நாட்டிய விழாவை மாநில அமைச்சர்கள் திரு.ராஜேந்திரன் திரு.தா.மோ.அன்பரசன் ஆகியோர் கடற்கரைகோவில் வளாகத்தில் இன்றுமாலை தொடங்கிவைக்கின்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**********

ஃபெஞ்ஜல் சான்றிதழ்

விழுப்புரம் மாவட்டத்தில் ஃபெஞ்ஜல் புயல் மழை பாதிப்புகளால் சேதமடைந்த ஆதார் அட்டை குடும்ப அட்டை சான்றிதழ்கள் உள்ளிட்டவற்றை பெறுவதற்கான சிறப்பு முகாம்கள் வரும் 26ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**********

நெல்லை கழிவுகள்

நெல்லை மாவட்டம் கோடகநல்லூர் நடுகல்லூர் முக்கூடல் மேலதிரியூர் சுத்தமல்லி ஆகிய பகுதிகளில் கொட்டப்பட்ட கேரள மாநில மருத்துவ கழிவுகளை மீண்டும் அம்மாநிலத்திற்கே கொண்டு செல்வதற்கான பணிகள் இன்று நடைபெறுகின்றன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**********

சிவகங்கை

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் e-NAM செயலி வாயிலாக மிளகாய், மல்லி, நெல் உள்ளிட்டவற்றை விற்பனை செய்து 15 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் ஈட்டியுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**********

அன்புமணி

ஆன்லைன் சூதாட்டங்கள் உடனடியாக தடை செய்யப்பட வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தகைய சூதாட்டங்களால் நேரிடும் உயிரிழப்புகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

**********

பணப்பாக்கம் சிப்காட்

ராணிப்பேட்டை பணப்பாக்கம் சிப்காட் தொழிற்பூங்காவில் டாட்டா நிறுவனம் சார்பில் அமைக்கப்பட உள்ள கார் உற்பத்தி ஆலை கட்டுமான பணிகள் தொடங்குவதற்காக சுற்றுசூழல் அனுமதி கோரப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் 28ஆம் தேதி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இந்த ஆலைக்கான அடிக்கல் நாட்டிய நிலையில் இந்நடவடிக்கை.

**********

இருவரி

புதுக்கோட்டை மாவட்டத்தில் காலியாக உள்ள மாவட்ட தர நிர்ணய ஆலோசகர், பல்மருத்துவ உதவியாளர், இடைநிலை சுகாதார பணியாளர்கள் ஆகிய 4 ஒப்பந்த அடிப்படையிலான காலிப்பணியிடங்களுக்கு நாளை மறுநாளுக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்ட விவசாயிகள் ராபி பருவத்தில் பயிர்காப்பீடு செய்ய விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே ஆண்டிபட்டி கிராமத்தில் நடமாடும் ஒற்றை காட்டு யானையை வனப்பகுதிக்குள் விரட்டும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

**********

விபத்து

சென்னையிலிருந்து நாகர்கோவில் நோக்கி சென்ற பேருந்து கடலூர் மாவட்டம் ராமநத்தம் அருகே சாலை தடுப்பில் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

காயமடைந்த 25க்கும் மேற்பட்டோர் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து ராமநத்தம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**********

சுற்றுலா

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில்,

கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலா தளங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை இன்று அதிகரித்து காணப்படுவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**********

மேட்டூர்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று 119.22 அடியாக அதிகரித்துள்ளது.

அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 886 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கும் நிலையில் 800 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 3 ஆயிரத்து 500 கன அடியாக உள்ளது.

**********

கிரிக்கெட்

வதோதராவில் வெஸ்ட் இண்டிஸ்க்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 6 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 21 ரன் எடுத்திருந்தது.

**********

மகளிர் கிரிக்கெட்

19 வயதிற்குட்பட்டோருக்கான 20-20 கிரிக்கெட் மகளிர் ஆசிய கோப்பையை இந்தியா கைப்பற்றியுள்ளது.

கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற பங்களாதேஷிற்கு எதிரான இறுதி ஆட்டத்தில் 41 ரன் வித்தியாசத்தில் இந்தியா வெற்றிபெற்றது.

முன்னதாக முதலில் பேட் செய்த இந்தியா 7 விக்கெட் இழப்பிற்கு 117 ரன் எடுத்திருந்தது.

பின்னர் களமிறங்கிய பங்களாதேஷ் 18.3 ஓவரில் 76 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**********

துப்பாக்கி சுடுதல்

2025ஆம் ஆண்டிற்கான உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடுதல் போட்டிகளை இந்தியா முதல்முறையாக நடத்த உள்ளது.

சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு சம்மேளனம் சார்பில் ரைஃபில், பிஸ்டல், ஷாட்கன் உள்ளிட்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெறும்.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

**********